**இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்கள் - 2024**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

**1.1** இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்களின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2** இரத்தினபுரி மாவட்டத்தின் 30 கமநலசேவை குழுக்கள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த 30 கணக்காய்வு அறிக்கைகளில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் ஒன்று வெளியிடப்பட்டிருந்ததுடன், முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

#### 1.3.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள் உட்பட கணக்கீட்டுக் கொள்கைகளுடன் இணக்கமின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமம் 01 இன் 21 (உ) பந்தியின் பிரகாரம், 22 குழுக்களினால் பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாரான எண்களுக்கு இடையிலான ஒப்பீடு ஒரு மேலதிக நிதி அறிக்கையாகவோ அல்லது நிதி அறிக்கைகளில் பாதிடப்பட்ட எண்களை ஒரு தனி நிரலாகவோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்திடம் ஆலோசனைகளைப் பெற்று அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமம் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 11 குழுக்களின் நிதி நிலைமை கூற்றில், நடைமுறைச் சொத்துக்கள் அவற்றின் திரவத் தன்மை குறைந்த சொத்து தொடக்கம் வரிசைப்படி குழுவினால் வரிசைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடைமுறைச் சொத்துக்களை சரியான வரிசைப்படி சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | நடைமுறைச் சொத்துக்கள் அவற்றின் திரவத் தன்மை குறைந்த சொத்திலிருந்து வரிசைப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 71 ஆம் பந்தியின் பிரகாரம், அறிக்கை திகதியிலிருந்து 12 மாதங்களுக்கு முன்னராகவும் மற்றும் 12 மாதங்களுக்குப் பின்னராகவும் அறவிடப்படும் அல்லது தீர்க்கப்படும் என எதிர்பார்க்கப்படும் பெறுமதிகள் | எதிர்காலத்தில் கணக்கீட்டு நியமம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தனித்தனியாக வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 08 குழுக்களினால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாரான நிதி நிலைமை கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் அத்தகைய ஏற்பாடுகளுக்கமைய வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமம் 07 இன் பிரகாரம், 04 குழுக்களினால் மீளாய்வாண்டின் இறுதியில் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் கிரயம், மீளாய்வாண்டின் இறுதியில் திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் தேறிய பெறுமதி என்பன வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கீட்டு நியமம் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமம் 09 இன் பிரகாரம், இறுதி இருப்புக்கள் கிரயம் அல்லது தேறிய தேறத்தக்க பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அதற்கமைய கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும், 08 குழுக்களினால் கிரயத்தினை மாத்திரம் கருத்திற்கொண்டு கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் நியமத்தின் பிரகாரம் இறுதி இருப்பு மதிப்பிடப்படும். | நியமத்தின் பிரகாரம் சொத்துக்கள் கணக்கிடப்படல் வேண்டும். |
| (ஊ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமம் 16 இன் பிரகாரம், நடைமுறை அல்லாச் சொத்துக்களின் கீழ் விவசாயச் செய்கையினை அதன் நியாயமான பெறுமதியிலிருந்து மதிப்பிடப்பட்ட விற்பனைச் செலவுகளைக் கழித்து வரும் பெறுமதியை கடந்த ஆண்டின் பெறுமதியுடன் ஒப்பிட்டு, ஏற்பட்டுள்ள இலாபம் அல்லது நட்டத்தை இனங்கண்டு தாமகன விவசாயக் குழுவினால் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பதில் பெறப்படவில்லை. | நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 12 குழுக்களினால் கமநல வங்கிக்கு தொடர்புடைய அனைத்துக் கணக்குகளையும் கமநலகுழுவின் வருடாந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடக்கி, ஒருங்கிணைந்த நிதி அறிக்கைகளை தயாரித்திருக்கவில்லை. | திணைக்களத்தினால் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள மாதிரியின் பிரகாரம் தயரிக்கப்பட்டது. | வருடாந்தம் ஒருங்கிணைந்த கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டுத் நியமம் 01 இன் 21 (உ) பந்தியின் பிரகாரம், 02 கமநலகுழுக்களினால் கமநல வங்கியின் மேலதிக நிதி அறிக்கையாக பாதிடப்பட்ட மற்றும் உள்ளவாரான எண்களுக்கு இடையிலான ஒப்பீடு ஒன்றையோ | எதிர்காலத்தில் சீர் செய்யப்படும் | பொதுத்துறை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அல்லது நிதி அறிக்கைகளில் பாதிடப்பட்ட எண்களை ஒரு தனி நிரலாகவோ சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 23 குழுக்களினால் ஆண்டிற்குரிய அதிகரிப்பு ரூபா 5,013,412 இனால் அதிகமாக மற்றும் ரூபா 12,298,320 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதி கூற்றுக்களை தயாரிக்கும் போது, கணக்கீட்டு ஆண்டிற்குரிய வருமானங்கள் மற்றும் செலவீனங்கள் சரியாகக் இணக்கம் செய்ய வேண்டியதுடன், அதற்குரிய சீர்திருத்தங்களும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 23 குழுக்களினால் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் ரூபா 2,195,200 இனால் குறைவாகவும் ரூபா 1,000,884 இனால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்ததுடன், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,419,382 இனால் குறைவாகவும் ரூபா 930,077 இனால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 08 குழுக்களினால் பொறுப்புக்கள் ரூபா 538,000 இனால் அதிகமாகவும் ரூபா 6,342,627 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 03 குழுக்களினால் தேறிய சொத்துக்கள் ரூபா 128,902 இனால் அதிகமாகவும் ரூபா 1,051,404 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்து மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது பதிவேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 12 குழுக்களுக்குரிய 51 கணக்கீட்டு விடயங்களில் நிதி கூற்றுக்களின்படியான பெறுமதிக்கும் அதற்குரிய பதிவேடுகளின்படியான மீதிக்கும் இடையே ரூபா 12,890,321 பெறுமதியான வேறுபாடு காணப்பட்டது. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பீடுகளை மேற்கொண்டு அதற்கேற்ப ஆவணங்களை நிதி அறிக்கைகளுடன் இணக்கஞ்செய்ய வேண்டும். |

### 1.3.4 அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| | அங்கீகரிக்கப்படாத கொடுக்கல் வாங்கலின் விபரம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 06 குழுக்களினால் ரூபா 53,998,196 பெறுமதியுடைய 125 குறிப்பேட்டு பதிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரிக்கப்பட்ட குறிப்பேட்டு பதிவுகள் மாத்திரமே இடப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 1.3.5 தொங்கல் கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 குழுக்களினுடைய தொங்கல் கணக்குகளில் நீண்டகாலமாக நிலுவையிலுள்ள ரூபா 20,315 வரவு மீதிகளும் மற்றும் ரூபா 266,270 செலவு மீதிகளும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | நிவித்திகல கமநலகுழுவில் ரூபா 230,419 பெறுமதியான தீர்க்கப்படாத மீதி காணப்படுவது அவதானிக்கப்பட்டது. | இந்த மீதியானது நீண்டகாலமாக நிலுவையில் உள்ளதுடன், இது தொடர்பான தகவல்களைக் கண்டறிய முடியவில்லை. | முறையான விசாரணை மேற்கொண்டு மீதிகள் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 1.3.6 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 10 குழுக்களுக்குரிய மொத்தமாக ரூபா 10,518,247 பெறுமதியுடைய 53 கணக்கீட்டு விடயங்களுக்கான சொத்து இடாப்புகள், மீதி உறுதிப்படுத்தல்கள் மற்றும் காலப்பகுப்பாய்வுகள் இல்லாமையினால், கணக்காய்வின் போது திருப்திகரமாக அவதானிக்கவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியவில்லை. | சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்காய்விற்கு கோரப்பட்டுள்ள சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டம் | | | |
| (i) | 14 ஆம் பிரிவு | 05 கமநலகுழுவினால் காணி உரிமையாளருக்குச் செலுத்த வேண்டிய நில உரிமை குத்தகை ஆகப் பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்தமாக ரூபா 2,538,330 பெறுமதியான கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வாரப் பயிர்செய்கை உரிமை குத்தகைத் தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், இணங்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | 22 ஆம் பிரிவு | 23 குழுக்களினால் விவசாய நிலங்களுக்கு மிகவும் பொருத்தமான பயிர்கள் மற்றும் கால்நடை வளர்ப்பிற்குப் பொருத்தமான விலங்குகளைத் தீர்மானித்து அதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அடுத்த வருடத்தில் இவ் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், இணங்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 44 ஆம் பிரிவு | 14 குழுக்களினுடைய விவசாய அமைப்புகளின் கணக்குகள், கமநல அபிவிருத்தி ஆணையாளரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியினால் பரிசோதிக்கப்பட்டு சான்றுப்படுத்தப்பட்டமைக்கான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் கணக்குகளைச் சான்றுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (iv) | 51 (1) ஆம் பிரிவு | 13 குழுக்களில் கமநல அபிவிருத்திச் சபை மற்றும் கமநல அபிவிருத்தி மையம் என்பன இதுவரையில் | எதிர்காலத்தில் கிடைக்கப்பெறும் கட்டளைகளுக்கு அமைய நடவடிக்கை | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | நிறுவப்பட்டிருக்கவில்லை என்பதுடன், அச் சட்டத்தின் 99 (2) (இ) (i) பிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி, 1979 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க கமநலச் சேவைச் சட்டத்தின் 43 (1) பிரிவின் கீழ் நிறுவப்பட்ட கமநலச் சேவைகுழு மற்றும் கமநலச் சேவை நிலையம் என்பன தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்பட்டு வந்தன. | எடுக்கப்படும். | |
| (v) | 53(4) ஆம் பிரிவு | 11 குழுக்களினால் காணி பதிவேடுகள் திருத்தப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, எதிர்காலத்தில் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (vi) | 56 (4) ஆம் பிரிவு | 03 குழுக்களினால் 2017 ஆம் ஆண்டிலிருந்து நிலுவையிலுள்ள மொத்தமாக ரூபா 176,946 பெறுமதியான ஏக்கர் வரி நிலுவைகளை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் ஏக்கர் வரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஏக்கர் வரி நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2011 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி (திருத்தப்பட்ட) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்திச் சட்டத்தின் 52 ஆம் பிரிவு | 14 குழுக்களினால் விவசாயத் திட்டமொன்றும் அபிவிருத்தித் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் இது தவறவிடப்பட்டிருந்தாலும், 2025 ஆம் ஆண்டிற்காக இது தயாரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | சட்டத்தின் பிரகாரம் செயற்பட வேண்டியதுடன், இணங்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் | 20 குழுக்களினால் போதுமான உள்ளக கணக்காய்வு | கணக்காய்வு நடவடிக்கைகள் மாவட்ட | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | சட்டத்தின் 38 (ஊ) பிரிவு | மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படும். | |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நி.பி. 110 | 12 குழுக்களினால் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சேதங்கள் மற்றும் நட்டங்கள் தொடர்பான பதிவேட்டைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக் கமைய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | நி.பி .137 | 03 குழுக்களினால் அங்கீகாரமின்றி 26 வவுச்சர்களின் ஊடாக ரூபா 405,416 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | வவுசர் அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது | -மேற்படி- |
| (iii) | நி.பி. 395 (ஏ) | 18 குழுக்களினால் வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தொடர்பில்லாத ஒருவரால் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதே உத்தியோகத்தராலேயே அவை தயாரிக்கப்பட்டிருந்தன. | உத்தியோகத்தரின் கடமைப் பட்டியலுக்கு அமைய, வங்கி கணக்கு இணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 09 ஆம் பிரிவு மற்றும் நிதிப் பிரமாணங்கள் 128 (1), 315, 880, 881 | 02 குழுக்களின் அனைத்து ஊழியர்களும் பிணைகளைச் சமர்ப்பித்திருக்கவில்லை. அத்துடன், நிதிப் பிரமாணங்களுக்கு முரணாக, விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் பிணை வைப்பதிலிருந்து | எதிர்காலத்தில் உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளரின் ஆலோசனையின் படி பிணைப் பணத்தை வைப்பிலிட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும், உதவி | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விடுவிக்கப்பட்டிருந்தனர். | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் கடிதத்திற்கு அமைய விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்கள் பிணை வைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 ஆம் இலக்க கமநல வங்கிச் சுற்றறிக்கை | | | |
| (i) | 2.4.1 ஆம் பந்தி | 19 குழுக்களினால் எதிர்பார்க்கப்படும் கொடுக்கல் வாங்கல் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் தயாரிக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் எதிர்பார்க்கப்படும் கொடுக்கல் வாங்கல் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ii) | 3.1 ஆம் பந்தி | 10 குழுக்களின் அதிகாரப் பிரதேசத்திற்குள் விவசாய உபகரணங்கள் அடிப்படையிலான திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் விவசாயிகளைக் கண்டறிந்து, அத்திட்டங்களை ஆரம்பிக்க அவர்களை ஊக்குவித்து, விவசாய உபகரணக் கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாயிகளைப் வலுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (iii) | 3.4.11.(1) | 18 குழுக்களினுடைய இடர் கடன் காப்பீட்டுக் கணக்கில் சேகரிக்கப்பட்ட ரூபா 4,806,471 நிலையான வைப்பு கணக்கொன்றில் வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அவ்வாறு இடம்பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படும் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு செய்யாத தரப்பினருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதி கூற்றுக்களின் பிரகாரம் 2024 ஆம் ஆண்டில் 26 கமநலசேவை குழுக்களின் மொத்த மிகை ரூபா 20,589,483 ஆகவும், 04 கமநல சேவைக் குழுக்களின் பற்றாக்குறை ரூபா 2,451,695 ஆகவும் காணப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் 18 கமநலசேவை குழுக்களின் மொத்த மிகை ரூபா 11,172,247 ஆகவும், 12 கமநல சேவைக் குழுக்களின் பற்றாக்குறை ரூபா 2,433,403 ஆகவும் காணப்பட்டது.

#### 2.1.1 பகுப்பாயவு ரீதியான மீளாய்வு

மீளாய்வாண்டில், கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் 12 கமநலசேவை குழுக்களில் ரூபா 10,514,840 ஆன மிகையில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், கடந்த ஆண்டில் நட்டமடைந்திருந்த 09 கமநலசேவை குழுக்கள் நடைமுறை ஆண்டில் இலாபமீட்டியுள்ளன. வர்த்தக வருமானம் அதிகரிப்பு, வர்த்தகமற்ற வருமானம் அதிகரிப்பு மற்றும் வர்த்தகமற்ற செலவுகள் குறைவடைந்தமை ஆகியன இதற்கு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாரப்பனை கமநலசேவை குழுவின் சேமிப்புக் கணக்கில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,962,333 ஆன மீதி காணப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த நிதியை வினைத்திறனான முதலீடுகளில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | முறையான அங்கீகாரத்தின் கீழ் மிகை நிதி வினைத்திறனக முதலீடு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | நாமல்தெனிய கமநலசேவை குழுவினால் மானிய உர நிதியை வைப்பிலிடுவதற்காக ஆரம்பிக்கப்பட்ட நடைமுறைக் கணக்கில், மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 51,929 மீதி காணப்பட்ட போதிலும், அது பல வருடங்களாக எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறாத ஒரு கணக்கு என்பது அவதானிக்கப்பட்டது. | இக்கணக்கின் ஊடாக நீண்டகாலமாக எவ்வித கொடுக்கல் வாங்கல்களும் இடம்பெறவில்லை. | செயலற்ற கணக்குகள் தொடர்பாக ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (இ) | ராஸ்ஸகல கமநலசேவை குழுவில் ரூபா 81,370 பெறுமதியான 02 வகையான நிதிகள் பல வருடங்களாக் நிலவி வருகின்றதுடன் அந்த நிதிகளைப் பொருத்தமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் உரிய பணிகளுக்கு ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிகளைப் விளைவற்று வைத்திருக்கக் கூடாது என்பதுடன், எதிர்பார்க்கப்படும் நோக்கங்களுக்காக அவற்றைப் |

| | | | பயன்படுத்த வேண்டும். |
|---|---|---|---|

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2015 யூலை 03 ஆம் திகதிய 7/2/15/3/3(1) ஆம் இலக்கக் கடிதத்திற்கு முரணாக, எம்பிலிப்பிட்டிய கமநலச் சேவை குழுவின் 05 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களினால் 2024 ஆம் ஆண்டில் மொத்தம் ரூபா 37,500 அலுவலகக் கொடுப்பனவை பெற்றுக்கொண்டிருந்தனர். | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய செலுத்தப்பட்டுள்ளது | சுற்றறிக்கைக்கு முரணான கொடுப்பனவுகள் தொடர்பாக முறைப்படியான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | எஹலியகொட கமநலசேவை மத்திய நிலையத்தின் முற்றத்தை அமைப்பதற்காக பக்கோ இயந்திரத்தை 8.9 மணித்தியாலங்கள் பயன்படுத்தியமைக்காக ரூபா 44,500 செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணி முறையாகச் செய்யப்பட்டமைக்கான உறுதிப்படுத்தல்கள் எதுவும் காணப்படவில்லை. | கழிவுகளை அகற்றுவதற்கும் மண்சரிவினால் ஏற்பட்ட மண் படிவுகளை அகற்றுவதற்கும் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளது. | பணிகள் முறையாக நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திய பின்னரே கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டும் என்பதுடன், அது தொடர்பான குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெல்மதுளை கமநலசேவைக் குழுவின் வயல் நிலங்களில் மாணிக்கக்கல் அகழ்வதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, அந்த நிலத்தின் பங்கு விவசாயியின் உடன்பாடு பெறப்படாத சந்தர்ப்பங்களும், நிலத்தின் உரிமையை உறுதிப்படுத்துவதற்காக நில உறுதிப்பத்திரத்தின் பிரதியை சமர்ப்பிக்காத சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டிருந்ததுடன், **ONE STOP SHOP** முறைமையின் கீழ் வழங்கப்பட்ட ஒரு அனுமதிப் பத்திரத்திற்கு தலா ரூபா 6,500 வீதம், வழங்கப்பட்ட 116 அனுமதிப் பத்திரங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 123,000 நிலுவைத் தொகையை | 2025 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு அனுமதிப்பத்திரப் பரிந்துரைக்கும் கமநலச் சேவை மத்திய நிலையத்தினால் பணம் அறவிடப்படும். | அனுமதிப்பத்திரங்களை வழங்கும் போது காணி உரிமையை உறுதிப்படுத்துவதற்கும், நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு மற்றும் குறித்த நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடாத தரப்பினருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திம்போல்கெட்டிய கமநலசேவை அதிகாரப்பரப்பிற்கு உட்பட்ட 18 குளங்கள் மற்றும் அணைகளை அளவீடு செய்து, அவற்றுக்குரிய நிலப்பரப்பைப் பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | குளங்கள் மற்றும் அணைகளை அளவீடு செய்து, நிலப்பகுதியைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கல்தொட்ட கமநலசேவை குழுவில், 2024/2025 பெரும் போகத்திற்காக உலக உணவுத் திட்டத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற 33.45 மெட்ரிக் தொன் "MOP" உரங்களில், 2025 யூலை 04 கணக்காய்வு திகதி வரை 2.67 மெட்ரிக் தொன் உரம் களஞ்சியத்தில் எஞ்சியிருந்த போதிலும், 2025 சிறு போகம் 2025 மார்ச் 31 அன்று ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக உரங்களை விநியோகிப்பதற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | முறையான அனுமதியைப் பெற்றுத் தாமதமின்றி உரங்களை விநியோகிக்க வேண்டும். |
| (ஈ) | கல்தொட்ட கமநலசேவைக் குழுவில், 2022 சிறு போகத்தில் மானிய கரிம உரங்களுடன் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்காகக் கிடைக்கப்பெற்ற 23033.75 கிலோகிராம் ERP உரம் மத்திய நிலையக் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது. 2025 யூலை 04 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட பௌதீகக் கணக்கெடுப்பின் போது, அந்த உர மூட்டைகள் உக்கிப்போயிருந்தமையும் அந்த உரக் கையிருப்பினால் களஞ்சியத்தின் இடவசதி தடைப்பட்டிருந்தமையும், குறித்த உரக் கையிருப்பினை விற்பனை செய்வதற்கு 2022 நவம்பர் 30 ஆம் திகதியே அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அறிவுறுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற் காக உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு கடிதமொன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது | எஞ்சியுள்ள உரங்கள் தொடர்பாக முறைப்படியான நடவடிக்கைகளைத் தாமதமின்றி எடுக்க வேண்டும். |
| (உ) | விவசாயிகள் மற்றும் விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவி உத்தியோகத்தர்களின் செயலாற்றலை அளவிடுவதற்கும், காணி உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கும், அறுவடை ஆய்வொன்றின் மூலம் விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனை கருத்திற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், வயல் நிலங்களின் | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | விவசாய நிலங்களின் உற்பத்தித்திறனைக் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தித்திறனைக் கணக்கிடுவதற்கு வெலிகேபொல கமநலச் சேவை குழு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஊ) | மண்ணின் PH பெறுமானம் மற்றும் மின் கடத்துத்திறன் (உப்புத்தன்மை) ஆகியவற்றைச் சோதிப்பதற்கான உபகரணம் 2021 சனவரி 29 ஆம் திகதி வெலிகேபொல கமநலச் சேவைக் குழுவிற்குக் கிடைத்திருந்த போதிலும், அதன் மூலம் மண் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டமைக்கான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | உபகரணத்தின் மூலம் எதிர்பார்க்கப்படும் பணிகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | பம்பஹின்ன கமநலசேவைக் குழுவில், இலவச மானிய உரத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காகக் கிடைக்கப்பெற்ற 1,689 கிலோகிராம் TSP உரம் 2025 ஆம் ஆண்டில் காலாவதியாகியுள்ளமை கண்டறியப்பட்டதுடன் 20,985 கிலோகிராம் யூரியாவில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஞ்சியிருந்த 13,400 கிலோகிராம் யூரியா உரக் கையிருப்பில், 187.995 கிலோகிராம் யூரியா உரத்தை விநியோகிப்பதற்கான அனுமதியை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தினால், அவை பயன்படுத்த முடியாத வகையில் காலாவதியாகிக் கட்டிகளாக மாறியிருந்தன. | TSP உரத்தினை விநியோகிப்பதற்கான அறிவுறுத்தல்கள் கோரப்பட்டுள்ளன | முறைப்படியான அனுமதியின் அடிப்படையில் காலாவதியான உரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குறித்த திகதிகளில் உர விநியோகம் செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | பம்பஹின்ன கமநலச் சேவைக் குழுவிற்குச் சொந்தமான 01 ஏக்கர் 01 ரூட் 4.74 பேர்ச்சஸ் நிலப்பரப்பைக் கொண்ட மத்திய நிலைய காணியில், சுமார் 01 ஏக்கர் அளவிலான பகுதி 2023 ஆம் ஆண்டிலிருந்து குத்தகைதாரர் ஒருவருக்கு குத்தகைக்கு விடப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஆம் ஆண்டிற்கான குத்தகைப் பணமாக ரூபா 11,000 ஆனது 2024 ஆம் ஆண்டில் அறவிடப்பட்டிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டிற்கான குத்தகைப்பணத்தை அறவிடுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஒப்பந்த அடிப்படையில் குத்தகை வழங்கப்பட வேண்டும் என்பதுடன், நிலுவைப் பணத்தைத் தாமதமின்றி அறவிட வேண்டும். அத்துடன், அவ்வாறு செய்யத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 17 குழுக்களின் மத்திய நிலையங்கள் அமைந்துள்ள 18 ஏக்கர் 03 ரூட் 14.5 பேர்ச்சஸ் நிலப்பரப்பிற்கான உரிமையைப் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய, அனைத்து மத்திய நிலையக் |

| | | | |
|---|---|---|---|
| | | | காணிகளையும் கையகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ஆ) | 09 குழுக்களின் இறுதி இருப்புக்களில் விதை நெல், அரிசி மற்றும் திரவ உரங்கள் ஆகியவற்றின் கீழ் ரூபா 789,267 பெறுமதியான காலாவதியான இருப்புகள் காணப்பட்டன. | காலாவதியான இருப்புகளை பதிவழிப்பதற்கு உதவி ஆணையாளரின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நடவடிக்கை எடுக்கப்படும் | இருப்புகள் காலாவதியாகாதவாறு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதுடன், முறைப்படியான அங்கீகாரத்தின் கீழ் காலாவதியான இருப்புகளை அகற்ற வேண்டும் |
| (இ) | கமநலப் பிணக்குகளுக்குத் தீர்வுகளை வழங்குவது மத்திய நிலையத்தின் பிரதான பணியாக இருந்த போதிலும், கடந்த ஆண்டுகளுக்குரியதாக பெல்மதுளை மற்றும் ஓப்பநாயக்க ஆகிய 02 கமநலசேவைக் குழுக்களுக்குக் கிடைக்கப்பெற்ற 47 விவசாயப் புகார்களுக்குத் தீர்வுகள் வழங்கப்பட்டிருக்கவில்லை. | புகார் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | புகார்களுக்கான தீர்வுகளை வழங்குவது நாளதுவரைாக்கப்பட்டு இடம்பெற வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 30 கமநலசேவை மத்திய நிலையங்களுக்குட்பட்ட அதிகாரப்பரப்புகளில் நெற்செய்கைக்குப் பயன்படுத்தக்கூடிய தரிசு நிலங்களின் அளவு, மீளாய்வாண்டின் இறுதியில் 6,537 ஏக்கர் 03 ரூட் 37.02 பேர்ச்சஸ் என அடையாளம் காணப்பட்டிருந்த போதிலும், அந்தத் தரிசு நிலங்களைச் செய்கைக்குட்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வயல் நிலங்களை ஆராய்ந்து தேவையான சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதுடன், அந்தந்தப் பகுதிகளில் காணப்படும் நடைமுறைச் சிக்கல்கள் காரணமாகவே வயல்கள் தரிசு நிலங்களாகக் காணப்படுகின்றன. | தரிசாகக் காணப்படும் அனைத்து விவசாய நிலங்களையும் செய்கை பண்ணுவதற்கான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 04 கமநலச் சேவை குழுக்களில் பயிர்செய்கை செய்யக்கூடிய மொத்த நிலப்பரப்பு 1537.2561 ஹெக்டேயர்களாக இருந்த போதிலும், 808.7156 ஹெக்டேயர் அளவிலான நிலப்பரப்பு பயிர்செய்கை செய்யபட்டிருக்கவில்லை. | பயிர்ச்செய்கை செயன்முன்னேற்றத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பயிர்செய்கை செய்யக்கூடிய அனைத்து நிலங்களையும் வினைத்திறனாகப் பயன்படுத்தக்கூடிய வகையில் வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | பம்பரபொட்டுவ கமநலச் சேவை குழு அதிகாரப்பரப்பில் மிகக்குறைந்த அளவிலான வயல் நிலங்களே பயிர்செய்கை செய்யப்படுவதும், ஏக்கர் வரி மற்றும் அறை வாடகை ஆகியன மட்டுமே பிரதான வருமான ஆதாரங்களாகக் காணப்படுவதும் தேயிலை, கருவா மற்றும் மிளகு போன்ற பயிர்ச் செய்கைகள் பரவிக் காணப்பட்ட போதிலும், விவசாயிகளை மத்திய நிலையத்திற்கு வரவழைப்பதற்கான முறையான பொறிமுறையொன்று இல்லாததினால், நிறுவனத்தைப் பராமரிப்பதற்குப் போதுமான வருமானம் இல்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | விவசாயிகளுக்குத் தேவையான சேவைகளை மிகவும் வினைத்திறனாக வழங்கி, அவர்களைக் கவர்ந்திழுப்பதற்கான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (எ) | வயல் நிலங்களின் பெயர்ப் பட்டியலின்படி கொலன்ன மற்றும் பனாமுர ஆகிய வி.ஆ.உ.உ பிரிவுகளில் முறையே 24 மற்றும் 07 பிரிவுகளின் பதிவு செய்யப்பட்ட நிலப்பரப்பு, ஏக்கர் வரிப் பதிவேட்டின் படியான வயல் நிலப்பரப்பு மற்றும் ஜீவ கொவி தரவுத் தளத்தின் பிரகாரம் வயல் நிலப்பரப்பு ஆகியவற்றிற்கு இடையே முரண்பாடுகள் காணப்பட்டன. இதன்படி, வெவ்வேறு தேவைகளுக்காக வயல் நிலங்கள் வெவ்வேறு அளவுகளில் காட்டப்படுவது அவதானிக்கப்பட்டதுடன், கடந்த ஆண்டுகளில் உரத் திட்டங்களின் போதும் மானியங்களை வழங்கும் போதும் பிழையான தரவுகளின் அடிப்படையிலேயே அந்த உதவிகள் வழங்கப்பட்டுள்ளமையும் மேலதிகமாக அவதானிக்கப்பட்டது. மேலும், அளவீடு செய்யப்பட்ட சரியான தரவுகளின் அடிப்படையில் வயல் நிலங்களின் பெயர்ப் பட்டியலிலுள்ள அளவுகளைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் முறைாக சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | விவசாயிகளுக்கு வினைத்திறனான சேவையை வழங்குவதற்குச் சரியான தரவுத் தளமொன்று பராமரிக்கப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | பெல்மதுளை கமநலசேவை குழுவிற்குட்பட்ட 20 பிரிவுகளின் நிலப்பரப்புகளை தனித்தனியாக அடையாளம் காணாமல், சமமான நிலப்பரப்பிற்கே ஏக்கர் வரி அறவிடப்பட்டிருந்ததுடன், நிலத்தின் ஏக்கர் அளவைத் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகளை அடையாளம் காணும் போது பல்வேறு காரணங்களினால் அடையாளம் காணப்படாத காணிகள், 2024 ஆம் ஆண்டில் அடையாளம் காணப்பட்டமையே இதற்கு காரணமாக அமைந்திருந்தது. | காணி அளவுகளைச் சரியாக அடையாளம் கண்டு, அக்காணி அளவுகளைத் திருத்தம் செய்வதற்கும், அதன் அடிப்படையில் ஏக்கர் வரியை அறவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | 20 செயற்குழுக்களில் நீண்டகாலமாக அறவிடப்படாமல் நிதி கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள மொத்தமாக ரூபா 21,890,743 பெறுமதியான 76 கடன்பட்டோர் மீதிகளை 2024 திசெம்பர் 31 ஆம் திகதியாகும்போது அறவிடுவதற்கும், மொத்தமாக ரூபா 5,387,726 பெறுமதியான 87 கடனகொடுநர் மீதிகளைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தகவல்களை உறுதிப்படுத்த முடியாத மீதிகள் என்பதால், உதவி கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுறுத்தல்கள் கிடைத்த பின்னர் அவற்றை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் நிலுவைகளை உரிய காலத்தில் அறவிடத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதுடன், கடன்பட்டோர் மீதிகளை அடையாளம் கண்டு அவற்றை விரைவாக அறவிடுப்பதற்கும், கடன்கொடுநர் மீதிகளை அடையாளம் கண்டு அவற்றைத் தீர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 03 கமநலசேவை குழுக்களுக்குச் சொந்தமான 03 விவசாய விற்பனை நிலையங்களும், 2 குழுக்களுக்குச் சொந்தமான 02 உணவகங்களும் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு எதிர்காலத்தில் பயன்படுத்தப்படும். | சொத்துக்கள் விளைவற்றதாக வைத்திருக்கக் கூடாது என்பதுடன், முறைப்படியான வேலைத்திட்டமொன்றின் ஊடாக அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 3 குழுக்களில் ரூபா 314,000 பெறுமதியான கரிம உர உற்பத்தி இயந்திரம் மற்றும் 2 துண்டாக்கும் இயந்திரங்கள் மற்றும் ஒரு டிராக்டர் ஆகியன 02 குழுக்களில் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | எதிர்காலத்தில் வாடகைக்கு விடுவதற்கு மற்றும் உர உற்பத்திக்காகப் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (இ) | 05 குழுக்களின் 05 உத்தியோகபூர்வ இல்லங்கள் நீண்டகாலமாகப் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | எதிர்காலத்தில் புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | குறித்த புனரமைப்புப் பணிகளை மேற்கொண்டு, சொத்துக்களைப் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 9 குழுக்களின் கமநல வங்கி கணக்கு மென்பொருள் தொகுதி பணிகளுக்காக ரூபா 2,668,540 பெறுமதியான தொகை தலைமை அலுவலகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்த போதிலும், இயந்திரங்களைப் பயன்படுத்துவதற்குத் தேவையான சேமிப்புப் புத்தகங்கள் கமநல வங்கிக்குக் கிடைக்கப்பெறாமை மற்றும் வங்கி மென்பொருள் தொகுதி நிறுவப்படாமை காரணமாகக் கணினி உபகரணங்கள் பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டன. | மென்பொருள் தொகுதி நிறுவப்பட்ட பின்னர் இந்த இயந்திரம் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும். | உரிய தரப்பினருடன் தொடர்பு கொண்டு, ஒரு விரைவான வேலைத்திட்டத்தைத் தயாரித்து, கூடிய விரைவில் இந்த இயந்திரத்தைப் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |
| (உ) | தாமஹன கமநல சேவைக குழுவிற்குச் சொந்தமான பசுமை இல்லமானது, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 373,896 செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அது பயன்படுத்தப்படாமல் விளைவற்று காணப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | சொத்துக்கள் விளைவற்றதாக வைத்திருக்கக் கூடாது என்பதுடன், முறைப்படியான வேலைத்திட்டமொன்றின் ஊடாக அவற்றை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.. |

**3.7 செயற்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளிலுள்ள தாமதங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 08 குழுக்களில் மீளாய்வாண்டிற்குள் அத்தியாவசியமாகப் புனரமைக்கப்பட வேண்டிய 248 சிறு நீர்ப்பாசனத் திட்டங்கள் உள்ளடங்கிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அவற்றில் 214 திட்டங்களை முன்னெடுப்பதற்குத் தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | முன்னுரிமையின் அடிப்படையில் வருடாந்தம் நிதி ஒதுக்கப்பட்ட புனரமைப்புப் பணிகள் மாத்திரமே முன்னெடுக்கப்பட்டுள்ள. | புனரமைப்பு முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தி, தரிசு நிலங்களைச் பயிர்செய்கை பண்ணுவதற்கு விவசாயிகளைத் ஊக்கமளிப்பதற்கு வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 06 கமநல சேவை குழுக்களுக்குட்பட்ட அதிகாரப்பரப்பிற்குள் 294 குளங்கள் மற்றும் அணைகள் காணப்பட்ட போதிலும், அவற்றில் 119 அணைகள் செயலற்ற நிலையில் காணப்பட்டன. | எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலற்றுக் காணப்படும் குளங்கள், அணைகள், விவசாயக் கால்வாய்கள் மற்றும் விவசாய வீதிகள் அனைத்தையும் மீண்டும் இயங்கக்கூடிய நிலைக்குக் கொண்டு வருவதற்கு குறுகிய கால வேலைத்திட்டமொன் றைத் தயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | | | நடைமுறைப்படுத்த வேண்டும். |

### 3.8 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிரியெல்ல கமநல சேவை குழுவினால், மீளாய்வாண்டிற்குரிய பெறுகைத் திட்டமொன்றைத் தயாரிக்காமல், 2024 ஆம் ஆண்டில் ரூபா 2,525,560 பெறுமதியான கொள்வனவுகள் செய்யப்பட்டிருந்தன. அத்துடன், விநியோகஸ்தர்களைப் பதிவு செய்யும் முறையொன்றும் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | தற்போது புதிய கோவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு இணங்கச் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், அவற்றுக்கு முரணாகச் செயற்பட்ட தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | பெறுகை வழிகாட்டி கோவையின் 3.4 ஆம் பிரிவின் பிரகாரம், சந்தை விலைப்புள்ளி கோரல் முறையின் கீழ் ஏலங்களை அழைக்காமல், 12000BTU கொள்ளளவு கொண்ட 05 குளிரூட்டிகளை கொள்வனவு செய்வதற்காக பெல்மதுளை கமநல சேவை குழுவினால் ரூபா 3,069,810 செலுத்தப்பட்டிருந்தது. இக் கொள்முதலின் போது, 2023 ஒக்தோபர் 21 ஆம் திகதியன்று 06 நிறுவனங்களுக்கு விலைப்புள்ளி கோரல் கடிதங்கள் நேரடியாக அனுப்பப்பட்டிருந்தன. இவ் விலைப்புள்ளி கோரல் கடிதத்தில், விலைகளைச் சமர்ப்பிக்க வேண்டிய இறுதித் திகதி மற்றும் வழிகாட்டி கோவையின் 6.2 ஆம் பிரிவின் பிரகாரம் ஏலங்களைச் சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் ஆகியன குறிப்பிடப்பட்டிருக்காததுடன் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம், கொள்வனவு செய்ய எதிர்பார்க்கப்படும் பொருளின் விபரக்குறிப்புகளும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விலைப்புள்ளிகளை வழங்கிய நிறுவனங்களின் முகாமைத்துவத்துடன் கலந்துரையாடியதாகவும், அக்காலத்தில் நிலவிய பொருளாதார நெருக்கடி காரணமாக விலைகளில் ஏற்ற இறக்கங்கள் காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், விபரக்குறிப்புகள் பெறப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல்களுக்கு முரணாகச் செயற்பட்டமை தொடர்பாக உரிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இரத்தினபுரி கமநலச் சேவை மத்திய நிலையத்தில் மீளாய்வாண்டில் ரூபா 785,406 செலவில் அலுமினிய அலுமாரிகள் பொருத்தப்பட்டிருந்ததுடன், இத்திட்டத்திற்காகத் தொழில்நுட்ப விபரக்குறிப்புகள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு முறையாக விலைப்புள்ளிகள் கோரப்பட்டமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை. நேரடியாக | மதிப்பீட்டில் சேர்க்கப்படாத செலவுகள் காரணமாகவே மேலதிகக் கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. | முறையான பெறுகை நடவடிக்கைகளை முன்னெடுக்காத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்ட விலைப்புள்ளி கோரல் மூலம் ஒரு விநியோகஸ்தர் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், அங்கு தீர்மானிக்கப்பட்ட குறைந்தபட்ச விலை மதிப்பீடு ரூபா 711,716 ஆக காணப்பட்ட போதிலும், திட்டத்தின் இறுதியில் அதற்காக ரூபா 785,406 ஆக அதாவது ரூ. 73,690 மேலதிகமாகச் செலுத்தப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஈ) | 2024 இன் 44 ஆம் இலக்க அரச நிதி முகாமைத்துவச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் பிரகாரம், ஒவ்வொரு அரச நிறுவனமும் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றியே கொள்வனவுகளை மேற்கொள்ள வேண்டிய போதிலும், எம்பிலிப்பிட்டிய கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் விற்பனைக்காகக் கொள்வனவு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 2,777,740 பெறுமதியான பொருட்கள், பெறுகை நடைமுறைகளுக்குப் புறம்பாகக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. மேலும், குறித்த கமநல சேவை குழுவினால் மீளாய்வாண்டிற்கான பெறுகைத் திட்டமொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுறுத்தல்களுக்கு அமைய பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது டன், அத்திட்டம் எதிர்காலத்தில் மாற்றியமைக்கப்படும். | பெறுகை வழிகாட்டல்களைப் புறக்கணித்துச் செயற்படுவது ஒரு குற்றமாகும் |
| (உ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 ஏப்ரல் 26 திகதிய 7/5/9/05 (மெ.ஹெ.பொ) தொகுதி இலக்கத்தைக் கொண்ட அறிவுறுத்தல் கடிதத்தின் 3(v) ஆம் பந்தியின் பிரகாரம், ரூபா 50,000 இற்கும் அதிகமான செலவீனங்களுக்கு மாவட்ட பெறுகை குழுவின் அங்கீகூரம் பெறப்பட வேண்டிய போதிலும் பனாமுர கமநல சேவைக் குழுவினால் 15 குஷன் கதிரைகளைக் கொள்வனவு செய்வதற்கு அவ்வாறான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட பெறுகை குழுவின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | முறையான அங்கீகாரத்தினை பெற்ற பின்னரே கொள்வனவு செய்யப்பட வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.9 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கஹவத்த கமநல சேவை குழுவின் கீழ் ரூபா 2,512,000 மதிப்பீட்டுச் செலவில் மீகஹவெல அணைக்கட்டின் பக்கச்சுவர் அமைக்கும் பணிக்காக, 2024 ஆகஸ்ட் 14 ஆம் திகதி விவசாய அமைப்புகளுடன் ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டிருந்த போதிலும் கணக்காய்வு திகதியான 2025 ஏப்ரல் 28 ஆம் திகதி வரையிலும் அந்தப் பணிகளைப் பூர்த்தி செய்வதற்குத் தவறியிருந்தது. | பொருட்களை ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படாத காரணத்தினால், தொடர்புடைய பணியைச் செய்வதற்கு மறுப்புத் தெரிவிக்கப்பட்டது. | ஆற்றல்மிக்க ஒரு ஒப்பந்தக்காரரைத் தெரிவு செய்து, முறையான மேற்பார்வையின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஒப்பந்தத்தின்படி பணிகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | Kick Start செயற்திட்டத்தின் கீழ் பெல்மதுளை பொரல்ல பிரிவில் கொடவெல்ல எஞ்சிய பணிகளை நிறைவு செய்வதற்காக, 281-2-2-12-2105 என்ற செலவுத் தலைப்பின் கீழ் விவசாய அபிவிருத்தித் திணைக்களத்தினால் 2024 மார்ச் 25 ஆம் திகதி ரூபா 257,400 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக ஒப்பந்தம் செய்துகொண்ட விவசாய அமைப்பு, ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட திகதியிலிருந்து 03 மாதங்களுக்குள் பணிகளை நிறைவு செய்து கையளிக்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆகஸ்ட் 10 ஆம் திகதி வரையிலும் இச் செயற்திட்டம் நிறைவேற்றப்படாத காரணத்தினால், குறித்த நிதி ஒதுக்கீட்டை விவசாய அபிவிருத்தித் திணைக்களம் மீண்டும் பொறுப்பேற்றுக்கொண்டது. இதன் விளைவாக, பொரல்ல பிரிவு விவசாயிகள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும்போது நஷ்டங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளமை அவதானிக்கப்பட்டது | ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்காக மாவட்ட அலுவலகத்திற்கு கடிதம் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது. | ஒப்பந்தம் செய்யும் போது, பணியை நிறைவேற்றக்கூடிய ஆற்றல்மிக்க ஒரு நபர் அல்லது நிறுவனத்தைத் தெரிவு செய்து, முறையான மேற்பார்வையுடன் செயற்பட்டு, ஒப்பந்தத்தின்படி பணிகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். |

## 3.10 மனித வளங்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 18 குழுக்களில் 109 விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவிப் பணியாளர் பதவிகள் வெற்றிடங்களாக | வெற்றிடமான குழுக்கள் மற்றும் பிரிவுகளுக்குப் பதில் கடமையாற்றுவதற்காக | பதவியனி மீளாய்வொன்றை மேற்கொண்டு, மிகவும் அத்தியாவசியமான |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டன. | உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அரசாங்கத்தினால் இதுவரை நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவில்லை. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 04 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல சேவைகுழுக்கள் 03 இல் மீளாய்வாண்டிற்குரிய செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான மாதிரிப்படிவம் மாவட்ட அலுவலகத்திலிருந்து கிடைக்கப்பெற்றிருக்கவில்லை | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (ஆ) | கொலொன்ன மற்றும் பனாமுர விவசாய சேவை செயற்குழுக்களின் 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளையும், உண்மையான வருமானம் மற்றும் செலவுகளையும் ஒப்பிடுகையில், 05 வருமானத் தலைப்புகளின் கீழ் விற்பனை வருமானத்தில் 62 வீதத்திலிருந்து 200 வீதம் வரையான வேறுபாடுகளும், 06 செலவுத் தலைப்புகளின் கீழ் 12 வீதத்திலிருந்து 96 வீதம் வரையான வேறுபாடுகளும் காணப்பட்டதுடன், 02 செலவுத் தலைப்புகளின் கீழ் முழுமையான நிதி ஒதுக்கீடுகளும் மீதமாகியிருந்தன. இதன் காரணமாக, குறித்த செயற்குழுக்கள் வரவு செலவுத் திட்டத்தை ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | பதில் பெற்றுக் கொடுக்கப்படவில்லை | இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை அடைவதற்கு பாதீட்டை ஒரு கட்டுப்பாட்டு உத்தியாகப் பயன்படுத்த வேண்டும். |

### 4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீட்டுத் தோட்டத் திட்டத்தின் கீழ் 05 கமநலசேவை குழுக்களுக்கு உட்பட்ட 463 வீட்டுத் தோட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும், | கடுமையான மோசமான வானிலை இதற்குக் காரணமாக | திட்டங்களைத் தயாரிக்கும் போது வானிலை மற்றும் |

| | | |
|---|---|---|
| அவற்றில் 164 வீட்டுத் தோட்டங்கள் இருந்தது. தோல்வியடைந்திருந்தன. | | காலநிலை நிலைமைகளைக் கருத்தில் கொண்டு கன்றுகளை பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

## 5. கமநல வங்கிகள்

### 5.1 கணக்கீட்டு குறைப்பாடுகள்

**கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 5 கமநலசேவை குழுக்களின் மீளாய்வாண்டிற்குரிய மிகையானது, ரூபா 8,140 இனால் அதிகமாகவும் ரூபா 623,685 இனால் குறைவாகவும் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் | நிதி கூற்றுக்களில் சீர் செய்வதற்கு அவசியமான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 07 கமநலசேவை குழுக்களின் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் ரூபா 1,322,086 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்ததுடன், நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 1,044,990 இனால் குறைவாகவும் மற்றும் ரூபா 21,790 இனால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தன. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் | சரியாகக் கணக்கிடப்பட வேண்டும் என்பதுடன், அவசியமான சீராக்கங்களை மேற்கொண்டு சீர் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 05 குழுக்களின் பொறுப்புக்களின் மீதியானது ரூபா 2,397,099 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் | -மேற்படி- |
| (ஈ) | 04 குழுக்களின் தேறிய சொத்துக்கள் ரூபா 832,357 இனால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் | -மேற்படி- |
| (உ) | 04 குழுக்களின் ரூபா 23,918,971 பெறுமதியான 37 குறிப்பேட்டு பதிவுகளுக்கு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும் | குறிப்பேட்டு பதிவுகளுக்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டியதுடன், அவ்வாறு அங்கீகாரம் பெறாத தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 08 கமநலசேவை குழுக்களின் பேரேடு மற்றும் நிதி அறிக்கைகளின்படி 16 கணக்குகளின் மீதிகளுக்கிடையில் ரூபா 2,115,315 அளவிலான வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் சீர்செய்யப்படும். | இணக்கம் செய்து சரியான மீதிகளை நிதி கூற்றுக்களில் சீராக்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (எ) | 13 கமநலசேவை குழுக்களின் கமநல வங்கிகளிலுள்ள சேமிப்புக் கணக்குகளில் ரூபா 204,673 தொடக்கம் ரூபா 2,251,646 வரையிலான மீதிகள் காணப்பட்ட போதிலும், மேலதிக நிதியை வினைத்திறனான முதலீடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வினைத்திறனான முறையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | முறைப்படியான அங்கீகாரத்தின் கீழ் வினைத்திறனான முதலீடுகளில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஏ) | 23 கமநல வங்கிகளில் கடன்களை உரிய காலத்தில் அறவிடுதல், கடன் அறவீட்டுச் செயல்முறைக்கு ஆதரவளித்தல், நிலுவையிலுள்ள கடன்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுத்தல் மற்றும் பதவியணியை வழிநடத்தித் தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் போன்ற விடயங்களில் உரிய உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் சரியாக நிறைவேற்றப்படாமையினால் ரூபா 21,500,902 காலங்கடந்த நிலுவைக் கடனாகக் காணப்பட்டது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வங்கிச் கடன்களை உரிய காலத்தில் அறவிடப்பட வேண்டியதுடன், நிலுவைக் கடன்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஐ) | 13 கமநல வங்கிகளில் கடன் திருப்பிச் செலுத்தும் காலம் கடந்திருந்த போதிலும், அறவிடப்பட வேண்டிய மொத்தக் கடன் தொகையான ரூபா 7,410,789 இலிருந்து எந்தவொரு கடன் தவணையும் வட்டியும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான விசாரணைகளை மேற்கொண்டு கடன்களை வழங்க வேண்டும் மற்றும் உரிய காலத்தில் கடன்களை அறவிடாத உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன், நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஒ) | 15 கமநல வங்கிகளில் மரணமடைந்த 57 கடன் பெற்றவர்களிடமிருந்து மொத்தம் ரூபா 1,180,747 அறவிடப்பட வேண்டியிருந்தது. | பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன | ஒப்பந்தத்திற்கமைய செயற்பட்டு, நிலுவைப் பணத்தைத் தாமதமின்றி அறவிட வேண்டும் |
| (ஓ) | 22 கமநல வங்கிகளில் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலவிய 38,209 சேமிப்புக் கணக்குகளில் 24,254 கணக்குகள் செயலிழந்த நிலையில் காணப்பட்டன. | வைப்பாளர்கள் பணம் வைப்பிலிடுவது குறைவாக உள்ளமையினால் இக்கணக்குகள் செயலிழந்துள்ளன. | கணக்குகள் செயலிழப்பதைத் தவிர்த்து, அவற்றைச் செயற்படும் கணக்குகளாகப் பேணுவதற்கு முறையான |

வேலைத்திட்டமொன்று
நடைமுறைப்படுத்தப்பட
வேண்டும்.